


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 306 | 29.04.2026 | WEDNESDAY | CHITHIRAI: 16 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 306 | 29.04.2026 | புதன்கிழமை | சித்திரை : 16 | விலை : ரூ.5/-

## தெற்காசியாவில் முதன்மை மாநிலமாக

# 'தமிழகம் உயர வேண்டும்'



■ தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்2026ஐ முன்னிட்டு, மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே, தலைமையில் வாக்கு எண்ணும் பணியாளர்களுக்கான பணி ஒதுக்கீடு நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில், நுண் பார்வையாளர்களுக்குச் சம வாய்ப்பு முறையில் கணினி மூலம் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டு, வாக்கு எண்ணிக்கைக்கான ஆயத்தப் பணிகளை உறுதி செய்தனர்.

சென்னை: ஏப்.29-

"தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளோம். தெற்காசியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உயர வேண்டும்" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு தொடர்ச்சியாக 2வது நிதியாண்டிலும் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 202425 நிதியாண்டில் 11.19% வளர்ச்சியைக் கண்ட நிலையில், 202526 நிதியாண்டில் 10.83% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக ஒன்றிய புள்ளியியல் துறை சார்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை. திராவிட மாடல் தனித்துவமான மாடல். சொன்னதை, எண்களிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். முதல் மூன்றாண்டுகளில் அடித்தளம் அமைத்து, இப்போது தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளோம்.

சிறப்பான நமது நிர்வாகத்திற்கு, உழைப்பால் துணை நின்ற தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி. இது தொடக்கம்தான். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி. நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல; தெற்காசியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உயர வேண்டும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## காவிரி மேலாண்மை ஆணையக் கூட்ட அறிவிப்பு சூழ்ச்சியா? : சீமான் சரமாரி கேள்வி



சென்னை: ஏப்.29-

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து, புதிய அரசுகள் அமைந்த பிறகே காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் 29.04.2026 அன்று நடைபெறும் என்று அறிவித்து இருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்று, தேர்தல் முடிவுகள் இன்னும் வெளிவராத நிலையில் கூட்டத்தை நடத்த காவிரி மேலாண்மை ஆணையம் முயல்வது வன்மையான கண்டனத்துக்குரியது.

காவிரி ஆற்றினை பங்குகொள்ளும் மூன்று முக்கிய மாநிலங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் இன்னும் அமையாத நிர்வாகச் சூழலில், காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை அவசர அவசரமாக கூட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது? முழுமையான அதிகாரம் பெறாத அரசுகளால் எப்படி முக்கிய முடிவுகளை எடுக்க முடியும்?

மாநிலங்களின் உயர் அதிகாரிகள் வேற்று மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருக்கும் சூழலில் மண்ணின் உரிமைகளையும், மக்களின் உணர்வுகளையும் எப்படி உரத்து எழுப்புவார்கள்?

நடைபெறவுள்ள கூட்டத்தில் மேகதாது அணை கட்டுமானம் குறித்த முக்கிய விவாதங்கள் நடைபெறவுள்ள நிலையில், இதர மூன்று மாநிலங்களில் அதிகாரம் படைத்த அரசுகள் இல்லாத நிலையில், கூட்டம் முழுக்க முழுக்க ஒருபக்க சார்பாக மாறி கர்நாடகாவுக்கு சாதகமாகிவிடாதா?

யாருடைய உத்தரவின் பேரில் இத்தனை அவசரமாக காவிரி மேலாண்மை ஆணையம் கூட்டப்படுகிறது? யாருடைய நலனுக்காக இத்தனை அவசரமாக ஆணையக் கூட்டம் நடைபெறுகிறது?

தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்க, கர்நாடக மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசு மற்றும் இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் கூட்டுச் சூழச்சியாகவே இக்கூட்டம் நடத்தப்படுவதாக தோன்றுகிறது. கச்சத்தீவு போன்று தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் இத்தகைய வரலாற்றுச் சதிகளை இனியும் அனுமதிக்க முடியாது.

ஆகவே, தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து, புதிய அரசுகள் அமைந்த பிறகே காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை கூட்ட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை இராணி மேரி கல்லூரி, லயோலா கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் பணிபுரியவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்களை முதற்கட்டமாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ரிப்பன் கட்டட வளாக அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## வேளச்சேரி பரங்கிமலை மின்சார ரயில் சேவைக்கு அமோக வரவேற்பு: தினமும் 28,000+ பேர் பயணம்

சென்னை: ஏப்.29-

வேளச்சேரி பரங்கிமலை இடையே பறக்கும் மின்சார ரயில் சேவை தொடங்கி 42 நாட்களை கடந்த நிலையில், நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது நாள்தோறும் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இத்தடத்தில் உள்ள புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையின் பொது போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது புறநகர் மின்சார ரயில் சேவை. சென்ட்ரல், கடற்கரை நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதில் கடற்கரை வேளச்சேரி இடையே இயக்கப்படும் பறக்கும் ரயில் வழித்தடத்தில் தினசரி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இதற்கிடையே, சென்னை கடற்கரை வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தின் விரிவாக்கமாக, வேளச்சேரி பரங்கிமலை திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 17 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த மார்ச் 14ம் தேதி ரயில் சேவை தொடங்கியது.



இந்த வழித்தடம் மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், வேளச்சேரி உட்பட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பேருதவியாக உள்ளது. இத்தடத்தில் ஆரம்பத்தில் தினசரி 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் பயணித்தனர்.

இது படிப்படியாக அதிகரித்து, தற்போது தினசரி 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். பரங்கிமலை ரயில் நிலையம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாகத் திகழ்வதால் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையத்தில் இருந்து புறநகர் மின்சார ரயில்கள், மெட்ரோ ரயில்கள் மூலமாக சென்னை நகரின் பல்வேறு இடங்களுக்கு எளிதில்செல்ல முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் இத்தடத்தில் தினசரி பயணிப் போர் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதம்பாக்கம் நிலையம் அதே நேரம், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் திறக்க வேண்டும் என்றும், புழுதிவாக்கம் ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, புழுதிவாக்கத்தைச் சேர்ந்த ஜி.சிவக்குமார் கூறும்போது, ''பரங்கிமலை வேளச்சேரி தடத்தில் உள்ள புழுதி வாக்கம் நிலையம் தற்போது பரபரப்பாக காணப்படுகிறது. ஆனால், இந்த நிலையத்தில் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை.

மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டு வசதிகளை ஏற்படுத்தி, முறையாகப் பராமரிக்க வேண்டும். ரயில் நிலையம், தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பேணப்பட வேண்டும். அதேபோல், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்'' என்றார்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறும்போது, "புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்தும் பணி செயல்பாட்டில் உள்ளது. ஆதம்பாக்கம் ரயில் நிலையம் மக்கள் பயன்பாட்டுக்கு விரைவில் திறக்கப்படும்'' என்றனர்.

## புதுச்சேரியில் வாங்கிய மதுவை தமிழகம் கொண்டு வருவது குற்றமா, இல்லையா?

கடலூர், ஏப்.29-

கடலூர் மாவட்ட மதுவிலக்கு போலீஸார் கடந்த ஆண்டு ஜனவரியில் புதுச்சேரி தமிழக எல்லையில் உள்ள சோதனைச் சாவடியில் காட்டுமயிலூரைச் சேர்ந்த வல்லரசு என்பவரின் வாகனத்தை சோதனையிட்டனர். அப்போது அவரிடமிருந்து புதுச்சேரியில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு லிட்டர் 680 எம்.எல் எடையளவு கொண்ட 3 மது பாட்டில்களை பறிமுதல் செய்து அவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

கடலூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இந்த வழக்கை ரத்து செய்யக் கோரி வல்லரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி எம்.நிர்மல்குமார் முன்பாக நடந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எம்.பாலாஜி, "தனிநபரின் சொந்த பயன்பாட்டுக்காக நான்கரை லிட்டர் மதுபானம் வைத்துக் கொள்ள தமிழக அரசின் 1996ம் ஆண்டு மதுபான விதிகளில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தமிழக அரசு கடந்த 2017ல் அரசாணை பிறபித்துள்ளது. எனவே மனுதாரர் தனது சொந்த பயன்பாட்டுக்காக ஒரு லிட்டர் 680 எம்.எல் மதுபானம் வைத்திருந்தது சட்டவிரோதமானது அல்ல. எனவே வழக்கை ரத்து செய்ய வேண்டும்" என்று வாதிட்டார். ஆனால் அரசு தரப்பில், மனுதாரர் புதுச்சேரியில் இருந்து மதுபானங்களை சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் கொண்டு வந்து மற்றவர்களுக்கு விற்பனை செய்துள்ளார். எனவேதான் அவர் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்று வாதிடப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, தனிநபர்கள் தங்களது சொந்த பயன்பாட்டுக்காக நான்கரை லிட்டர் மதுபானம் வைத்துக் கொள்ளலாம் என தமிழக அரசின் விதிகள் அனுமதிக்கும் நிலையில், மனுதாரர் மீது வழக்குப் பதிவு செய்தது ஏற்புடையதல்ல எனக் கூறி மனுதாரர் மீதான வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், கடலூர் மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சார்பில் தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலும், இது தொடர்பாக கடலூர் மாவட்ட மதுவிலக்கு போலீஸார் கூறுகையில், "தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகள், உரிமம் பெற்ற வளாகங்களில் விற்கப்படும் மதுபானம் மற்றும் முறையாக அங்கீகரிக்கப்பட்ட மதுபானங்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.

பிற மாநில மதுபானங்கள் மற்றும் மாநில அரசின் அறிக்கை, பிராண்ட் அறிமுக அரசாணை, இறக்குமதி அனுமதிகள் மூலம் குறிப்பிடப்படாத மதுபானங்களை அதிகபட்ச வரம்பான நான்கரை லிட்டர், 7.8 லிட்டர் அளவுக்கு பீர் அல்லது 9 லிட்டர் அளவுக்கு ஒயின் ஆகியவற்றை தனிப்பட்ட பயன்பாட்டுக்கோ அல்லது விற்பனைக்காகவோ வைத்திருப்பது தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் பிரிவு 4(1)(சி) மற்றும் 14இன் கீழ் குற்றமாகும். எனவே புதுச்சேரியில் இருந்து சட்டவிரோதமாக 90 எம்.எல் மதுபாட்டிலை தமிழகத்துக்குள் கொண்டு வந்தாலும் குற்றமே. அதன் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கடலூர் மாவட்ட மதுவிலக்கு போலீஸார் தெரிவித்தனர்.

தமிழக அரசு முறையீடு:

இந்த நிலையில், நீதிமன்ற உத்தரவு குறித்து விளக்கம் அளிக்க கோரிய மனுவை நாளை விசாரணைக்கு எடுக்கக் கோரி, தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, நீதிபதி எம்.நிர்மல்குமார் முன்பு முறையீடு செய்தார். அப்போது அவர், 'நீதிமன்ற உத்தரவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. தனிநபர் 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ள அனுமதியளிக்கும் அரசாணை புதுச்சேரி மாநில மதுபானத்துக்கு பொருந்தாது.

பிற மாநில மதுபானங்கள், மிகக் குறைந்த அளவில் இருந்தாலும் அதனை வைத்திருப்பது அல்லது விற்பனை செய்வது சட்டப்படி குற்றம் என அரசு தரப்பில் ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது' என்று அவர் கூறினார். தலைமை குற்றவியல் வழக்கறிஞரின் முறையீட்டை ஏற்ற நீதிபதி, விளக்கம் கோரிய மனுவை நேற்று (ஏப்.29) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அனுமதியளித்துள்ளார்.

# தேர்தலுக்காக அவசர கதியில் தொடங்கப்பட்ட சாலை அமைக்கும் பணி பாதியிலேயே நிறுத்தம்

தாம்பரம், ஏப்.29-

தாம்பரம் அருகே அகரம்தென் ஊராட்சியில் தேர்தலுக்காக அவசர கதியில் தொடங்கப்பட்ட சாலை அமைக்கும் பணி தொடங்கிய கையோடு நிறுத்தப்பட்டது. இதனால் பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது. செங்கல்பட்டு மாவட்டம், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் கிராம ஊராட்சியில் ஜெ.ஜெ. நகரில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்களில் மக்கள் வசித்து வருகின்றனர். அங்கு கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் சாலை அமை க்கப்பட்டது. அதையடுத்து, சாலைகள் அமைக்கப்படாததால், சாலையில் ஜல்லிகள் பெயர்ந்து குண்டும், குழியுமாக காட்சியளித்தன. மேலும், சாலை மேடாக இருந்ததால், சாலையை பயன்படுத்தும் மக்கள், இருசக்கர வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர்.இந்நிலையில், தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன் பல லட்சம் செலவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி தொடங்கின. தரமற்ற முறையில் தொடங்கப்பட்ட இப்பணி பொதுமக்கள் கேள்வி எழுப்பியதால் ஒப்பந்ததாரர் பாதியிலேயே



நிறுத்தி சென்று விட்டதாக கூறப்படுகிறது.தேர்தல் நேரம் என்பதால் அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை. சாலைப் பணி அரை குறையாக நிறுத்தப்பட்டதால், தற்போது பொது மக்கள், வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர். இந்த பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட துறையினர் விரைவாக, உரிய தீர்வு காண வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். இது குறித்து, அந்த பகுதியை சேர்ந்த ராஜாராம் கூறியது: சாலை சீரமைக்கும் பணி தொடங்கியதால் மகிழ்ச்சியடைந்தோம்.

இதில் முதல் கட்டமாக, பழைய சாலை பெயர்த்து எடுக்கப்பட்டது. அதன் பின்னர், ஜல்லிகற்கள் கொட்டப்பட்டன. ஆனால், அதன் பிறகு எந்த பணியும் நடைபெறவில்லை. தேர்தலில் வாக்கு வாங்க வேண்டும் என்பதால் பணிகள் தரமில்லாமல் அவசர கதியில் பணி தொடங்கியது.ஆனால், திடீரென சாலை பணி நிறுத்தப்பட்டது. சாலையில் ஜல்லி கற்கள் சிதறி கிடப்பதால் பைக் மற்றும் சைக்கிளில் செல்லும் வாகன ஓட்டிகள் தடுமாறி கீழே விழுந்து காயம் அடைகின்றனர்.மேலும், நடந்து செல்பவர்கள் கால்களையும் ஜல்லி கற்கள் பதம் பார்க்கின்றன. வாகனங்கள் செல்லும் போது புழுதி பறப்பதால், அந்த பகுதி புகை மண்டலம் போல் காட்சி அளிக்கிறது. இதன் காரணமாக, அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே, பாதியில் நிறுத்தப்பட்ட சாலைப் பணியினை தொடங்க மாவட்ட ஆட்சியர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம் என்றார்.

# தஞ்சையில் புத்தகத் திருவிழா: பாரதிதாசன் பிறந்தநாளில் திறக்கப்பட்ட அறிவுச் சுரங்கம்!

தஞ்சாவூர் ஏப். 29-

"புத்தகம் வாசிப்பவனே உலகை ஆளுகிறான்!" உலகப் புத்தக தினம் மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தஞ்சை பிரவுசர் புத்தக உலகத்தில் மாபெரும் புத்தகக் கண்காட்சி தொடங்கியது.இந்த அறிவுத் திருவிழாவைத் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தித் தொடர்பாளர் ரகமதுல்லா, ரிப்பன் வெட்டித் தொடங்கி வைத்தார். குந்தவை நர்சிங் கல்லூரி நிர்வாக அலுவலர் பாஸ்கர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பேராசிரியர் குட்டிமணி அனைவரையும் வரவேற்றார்.



* புத்தகங்களின் அணிவகுப்பு:*

இந்தக் கண்காட்சியில் வாசகர்களைக் கவரும் வகையில் 15% அதிரடித் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது. மே 15ம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த விற்பனையில், இறையன்பு மிகிஷி அவர்களின் படைப்புகள் (பத்தாயிரம் மைல் பயணங்கள், வாய்மையே தலைமை கொள் போன்றவை), வரலாற்று நூல்கள் பொன்னியின் செல்வன், உடையார், வேர்கள், நெப்போலியன் வரலாறு, அறிவுசார் நூல்கள் அட்டாமிக் ஹாபிட்ஸ், கான்ஸ்டிடியூஷன் ஆப் இந்தியா, பிசினஸ் சீக்ரெட்ஸ், ஆளுமைகள் பகத்சிங், பிரபாகரன், மலாலா, பிரமஹம்சா யோகானந்தா, எழுத்தாளர்கள்: சுஜாதா, வைரமுத்து, தமிழ்ச்செல்வன், தொ.ப. பரமசிவம் ஆகியோரின் சிறந்த நூல்கள் குவிக்கப்பட்டுள்ளன.

அறிவியல், இலக்கியம், கலை, சமூக அறிவியல், பங்குச்சந்தை மற்றும் இன்சூரன்ஸ் குறித்த அரிய தகவல்கள் அடங்கிய நூல்களும் இங்கே கிடைக்கின்றன.

நிகழ்வில் மன்னை நாராயணசாமி பிசியோதெரபி கல்லூரி துணை முதல்வர் அ.சதீஷ்குமார், வாசகர் வட்ட புரவலர் இராமலிங்கம், பிரவுசர் புத்தக நிலைய நிர்வாக இயக்குனர் உரத்தநாடு குணசேகரன் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர். இறுதியில் பிரவுசர் புத்தக நிலைய உரிமையாளர் மணிமொழி நன்றி கூறினார்.

# விண்வெளியில் இருந்து கிராமங்களை 'மேப்பிங்' செய்த இஸ்ரோ

புதுடெல்லி, ஏப்.29-

விண்வெளியில் இருந்து இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்தையும் மிகத் துல்லியமாக வரைபடமாக்கும் முக்கிய திட்டத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.இது தொடர்பான அறிவிப்பை தேசிய ஊராட்சிகள் தினமான கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரோ வெளியிட்டது. நாடு முழுவதற்குமான உயர்தெளிவுத்திறன் கொண்ட நிலப் பயன்பாடு மற்றும் நிலப்பரப்பை 1:10000 என்ற விகிதத்தில் வரைபடம் செய்து முடித்துள்ளதாக இஸ்ரோ அறிவித்தது. அதாவது வரைபடத்தில் உள்ள 1 செ.மீ என்பது தரையில் வெறும் 100 மீட்டரைக் குறிக்கும். இது ஒரு நெல் வயலுக்கும் குளத்துக்கும் இடையிலான வித்தியாசத்தை துல்லியமாக வேறுபடுத்திக் காட்டும் அளவுக்குத் தெளிவானது.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் 6,49,481 கிராமங்கள் இருந்தன. இந்த செயற்கைக் கோள் தரவை அரசு நிறுவனங்களுக்கு இஸ்ரோ வழங்கியுள்ளது.இது தொடர்பாக இஸ்ரோ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தத் தரவுத்தொகுப்பு கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் துணைபுரிவதுடன், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் 'கிராம் மஞ்சித்ரா' (கிராம வரைபடம்) இணையதளத்தில் உள்ள தகவல் பிரிவுகளில் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற அளவில் வலுவான, தரவு சார்ந்த நிர்வாகத்தை சாத்தியமாக்குகிறது" என்று தெரிவித்துள்ளது.கிராம் மஞ்சித்ரா இணையதளம், உள்ளாட்சி அமைப்புகள் தரவு சார்ந்த வளர்ச்சி முடிவுகளை எடுக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களை வரைபடமாக்குவது, கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகத் தயாரிப்பதற்கு உதவும். இது தரவு அடிப்படையிலான முடிவெடுக்கும் முறையை சாத்தியமாக்குவதுடன், நில வளங்களையும் அவற்றின் பயன்பாட்டு முறைகளையும் கண்டறிய உதவும். ஒட்டுமொத்தமாக, இந்தியாவின் கிராமப்புறங்களில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புடைமையையும் இது மேம்படுத்தும். மேலும் அடிமட்ட அளவில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும்

# மதுரை திருமங்கலம் பகுதியில் மணல் கொள்ளையை தட்டி கேட்டவர் மீது தாக்குதல்

மதுரை, ஏப்.29-

மதுரை திருமங்கலம் பகுதியில் மணல் கொள்ளையை தட்டிக் கேட்டவர் மீது தாக்குதல் நடைபெற்றுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மணல் கொள்ளை தொடர்பாக கள்ளிக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்த அருண்குமார் என்பவரை, புகாரை திரும்ப பெறக்கோரி கலாநிதி என்பவர் மிரட்டியுள்ளார். இதனை தொடர்ந்து புகாரை திரும்பப் பெற்ற அருண், பின்னர் மதுரை ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கும்பல் அருண்குமார் மற்றும் அவரது உறவினர் மீது பட்டா கத்தி கொண்டு தாக்கியுள்ளது

# கார் ஓட்டுநரை சர்ஜிக்கல் கத்தியால் வெட்டிய தனியார் மருத்துவமனை இயக்குநர் கைது

சென்னை, ஏப்.29-

அயனாவரத்தில் மது போதையில் தகராறு செய்த கார் ஓட்டுநரை, சர்ஜிகல் கத்தியால் குத்திய தனியார் மருத்துவமனை இயக்குநர் கைது செய்யப்பட்டார்.திருமுல்லைவாயில் எம்ஜிஆர் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சத்யா (32). இவர் அயனாவரம் கே.ஹெச். சாலையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கடந்த மாதம் 20ம் தேதி கார் ஓட்டுநராகப் பணியில் சேர்ந்துள்ளார்.அவர் அடிக்கடி மது அருந்திவிட்டுப் பணிக்கு வந்ததாலும், சரியாக வேலைக்கு வராததாலும், மருத்துவமனை இயக்குநர் நவீன் கடந்த 4ம் தேதி அவரைப் பணியிலிருந்து நீக்கியுள்ளார்.இந்நிலையில், கடந்த 24ம் தேதி



மாலை மருத்துவமனைக்கு மது போதையில் வந்த சத்யா, இயக்குநர் நவீனிடம் பணம் கேட்டு தகராறு செய்துள்ளார். அப்போது சத்யாவிடம் ரூ.4 ஆயிரத்தை கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தைக் காலையில் தருவதாகக் கூறியுள்ளார்.பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்ற சத்யா, மீண்டும் மது அருந்திவிட்டு வந்து, மருத்துவமனை ஊழியர்களிடமும் இயக்குநரிடமும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த இயக்குநர் நவீன், அங்கிருந்த சர்ஜிக்கல் கத்தியை எடுத்து சத்யாவின் தோள்பட்டையில் வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் காயமடைந்த சத்யா, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த அயனாவரம் காவல் துறையினர் விசாரணை நடத்தினர். இரு தரப்பினரும் அளித்த புகாரின் அடிப்படையில், நவீன் மற்றும் சத்யா ஆகிய இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.அதைத்தொடர்ந்து, மருத்துவமனை இயக்குநர் நவீனை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சிகிச்சைக்குப் பின் கார் ஓட்டுநர் சத்யாவையும் கைது செய்ய உள்ளதாகப் போலீஸார் தெரிவித்தனர்.



# "இந்த தேர்தல் மம்தாவின் கவுரவத்துக்கான போராட்டம்" திரிணமூல் எம்.பி. கருத்து

கொல்கத்தா, ஏப்.29-

தற்போதைய மேற்கு வங்க தேர்தல், முதல்வர் மம்தா பானர்ஜியின் கவுரவத்துக்கான போராட்டம் என்று திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் ஜாதவ்பூர் தொகுதி எம்.பி. சயோனி கோஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: முதல்கட்ட தேர்தல் நடைபெற்ற 152 தொகுதிகளில் 100க்கும் மேற்பட்ட இடங்களை நாங்கள் வெல்வோம். இந்தத் தொகுதிகளில் எங்கள் கட்சியின் கோட்டைகளாகக் கருதப்படும் முர்ஷிதாபாத், கிழக்கு, மேற்கு மிட்னாபூர், புருலியா, பாங்குரா, ஜார்கிராம், பிர்பூம் போன்ற பகுதிகளும் அடங்கும்.

களத்திலிருந்து வரும் தகவல்கள் எங்களுக்கு மிகவும் சாதகமாக உள்ளன. மக்கள் எங்களுக்கு ஆதரவளிக்க திரண்டு வருகின்றனர். இது வங்காளத்தின் மற்றும் மம்தா பானர்ஜியின் கவுரவத்துக்கான ஒரு போராட்டம். நாங்கள் வெற்றி பெறுவோம். வங்காளம் வெற்றி பெறும். முதல்கட்ட தேர்தலில் ஆண்களை விடப் பெண்கள் இரண்டு சதவீதம் கூடுதலாக வாக்களித்துள்ளனர். இது திரிணாமுல் கட்சியின் வெற்றிக்கான அறிகுறியாகும்.

முதல்கட்ட தேர்தலில் சாதனை அளவாக 93% வாக்குகள் பதிவாகியுள்ளது. இது மாற்றத்துக்கான வாக்கு என்று பாஜக கூறுகிறது. ஆனால் அதுபற்றி எங்களுக்கு கவலை இல்லை. பாஜக தலைவர்கள் 365 நாட்களும் இங்கேயே தங்கியிருந்தாலும் பாஜகவால் வெற்றி பெற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஆந்திரா: மகனின் புதிய பைக்கை தீயிட்டு கொளுத்திய தந்தை

விசாகப்பட்டினம், ஏப்.29-

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் சந்திரசேகர். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் கல்லூரியில் சேர்ந்து படித்து வருகிறார். கடந்த ஆண்டு இவர் கல்லூரியில் சேரும்போது, தனக்கு புதிய பைக் வேண்டும் என தனது தந்தையை நச்சரித்துள்ளார். மகன் ஆசைப்படுகிறானே என சந்திரசேகரும் ரூ.1 லட்சத்துக்கும் அதிக விலையில், மாதத் தவணையில் பைக் ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார்.



ஆனால் அதன் பிறகு மகனின் போக்கே மாறி விட்டது. அடிக்கடி நண்பர்களுடன் பைக்கில் வெகு தூரம் செல்வது, போக்குவரத்து விதிகளை அடிக்கடி மீறுவது, அதிக வேகமாக செல்வது என மகன் செயல்பட்டுள்ளார்.

போக்குவரத்து விதிமீறல் தொடர்பாக அபராத ரசீது அடிக்கடி தந்தையின் செல்போனுக்கு வந்துள்ளது. இதற்கிடையில் பைக்கில் மகன் வேகமாக சென்றதால் ஒரு விபத்தும் ஏற்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த மகனுக்கு ரூ.1 லட்சம் வரை சந்திரசேகர் மருத்துவ செலவு செய்துள்ளார். அந்த பைக்கை பழுது நீக்க ரூ.20 ஆயிரம் செலவிட்டுள்ளார். மகன் குணமடைந்த பிறகும் அவரது போக்கில் எந்த மாற்றமும் ஏற்படாததால் சந்திரசேகர் ஆத்திரமடைந்தார். இதில் நேற்று அவர் தனது மகன் பைக்கை ஒரு மைதானத்தில் வைத்து, அதன் மீது பெட்ரோலை ஊற்றி தீயிட்டு கொளுத்தினார். இது குறித்த தகவலின் பேரில் பெந்துர்த்தி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நடுக்கடலில் மீன் பிடித்தபோது தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையரை பிடித்த நாகை மீனவர்கள்

நாகப்பட்டினம், ஏப்.29-

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களுக்கும், இலங்கை கடற்கொள்ளையர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவரை நாகை மீனவர்கள் பிடித்து வந்து போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.மேலும் 2 பேர் படகு மூலம் தப்பினர். நாகை மாவட்டம் செருதூரிலிருந்து பாலமுருகன் என்பவருக்குச் சொந்தமான பைபர் படகில் கடந்த 25ம் தேதி சக்திமயில், அபிமன், பாலசுப்பிரமணியன், பழனிச்சாமி, கன்னியாகுமரி உவரி பகுதியை சேர்ந்த அபி ஆகியோர் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அங்கு ஒரு படகில் இலங்கை கடற்கொள்ளையர்கள் 3 பேர் வந்தனர். மீனவர்களைத் தாக்கி, படகில் இருந்த மீன்கள், ஜிபிஎஸ் கருவி, செல்போன் ஆகியவற்றை பறித்துக் கொண்டு, வலையையும் அறுக்க முற்பட்டனர்.அதை தடுக்க முயன்றபோது இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. இதில், கடற்



கொள்ளையர்களில் ஒருவரை செருதூர் மீனவர்கள் பிடித்தனர். மற்ற 2 பேர் படகில் தப்பினர். பிடிபட்ட நபர் இலங்கை காங்கேசன்துறை வழலையைச் சேர்ந்த அயந்தன் என்பதும், இவர் உள்ளிட்ட 3 பேரும், இதற்கு முன் செருதூர் மீனவர் மணிவாசகம் என்பவரது படகை மறித்து, அதிலிருந்தவர்களை தாக்கி உடமைகளை கொள்ளையடித்ததும் தெரியவந்தது.பின்னர் அவரை செருதூர் மீன்பிடி இறங்கு தளத்துக்கு நேற்று அழைத்து வந்து கீழையூர் போலீஸாரிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர். கடலில் நடந்த மோதலில் காயமடைந்த அயந்தன், நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.அதேபோல, கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் காயமடைந்த செருதூர் மீனவர்கள் 7 பேரும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.இதுகுறித்து பாதிக்கப்பட்ட மீனவர் மணிவாசகம் கூறும் போது, எங்கள் படகை வழிமறித்த இலங்கை கடற்கொள்ளையர்கள், படகில் இருந்த மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்களை பறித்துக் கொண்டனர்.தொடர்ந்து நள்ளிரவு முதல் அதிகாலை 3 மணி வரை அடித்து உதைத்து கொடுமைப்படுத்தினர். எனது மகனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, இனி நீங்கள் வந்தால் பெட்ரோல் குண்டு வீசி கொன்று விடுவோம் என மிரட்டினர் என்றார்.தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையர்களில் ஒருவரை தமிழக மீனவர்கள் பிடித்து வந்து தமிழக போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# பெட்ரோல் டீசல் வாங்க ஏனாமிற்கு படையெடுக்கும் ஆந்திர பண்ணை விவசாயிகள்: உள்ளூர்வாசிகள் பாதிப்பு

புதுச்சேரி, ஏப்.29-

பெட்ரோல் டீசல் வாங்க ஏனாமிற்கு படையெடுக்கும் ஆந்திர பண்ணை விவசாயிகள் கேன் மற்றும் பேரல்களுடன் பல மணி நேரம் காத்திருந்து வாங்குவதால் உள்ளூர் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு மற்றும் இயந்திரங்கள் மூலம் பயிர் அறுவடை செய்வதால் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. பெட்ரோல் டீசல் விநியோகத்திலும் அங்கு கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடல் மற்றும் ஆற்றுப் பகுதியில் இறால் மற்றும் மீன் குட்டைகளில் அதிக ஜெனரேட்டர்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்தச் சூழ்நிலை



காரணமாக ஆந்திராவை ஒட்டியுள்ள புதுச்சேரி பிராந்தியமான ஏனாமில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்க வருவதால் உள்ளூர் மக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெட்ரோல் நிலையங்களில் கூட்டம் அலைமோதுகிறது. கேன்களை வரிசையில் வைத்து நுகர்வோர் காத்திருக்கின்றனர். பெட்ரோல் நிலையங்களில் காவல் துறை முன்னிலையில் எரிபொருள் விநியோகம் நடத்த ஏனாம் நிர்வாகம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. ஏனாம் காவல் கண்காணிப்பாளர் வரதராஜன் மேற்பார்வையில் மக்களுக்கு தடையின்றி எரிபொருள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து வரும் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக, கடந்த சில நாட்களாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் செவ்வாய்க்கிழமை முதல், ஏனாம் உள்ளூர் மக்களுக்கு பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவை, உள்ளூர் பெட்ரோல் நிலையங்களில் காலை 5 மணி முதல் காலை 8 மணி வரை மட்டுமே விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தை விட ஏனாமில் எரிபொருள் விலை ரூ.12 முதல் 14 வரை குறைவாக உள்ளது.

எனவே, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் குறிப்பாக விவசாயிகள் பிளாஸ்டிக் கேன் மற்றும் பேரல்களுடன் எரிபொருள் வாங்க ஏனாமிற்கு திரண்டு வருகின்றனர். இவ்வாறு வெளியூர் மக்கள் திரண்டு வருவதால், ஏனாம் உள்ளூர் மக்கள் கோடை வெயிலில் மணிக்கணக்கில் காத்திருந்து, தங்கள் சொந்த வாகனங்களுக்கு எரிபொருள் பெறுவதற்குப் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர். பல்வேறு சங்கங்கள் இப்பிரச்சினையை எழுப்பியதைத் தொடர்ந்து, பிராந்திய நிர்வாக அதிகாரி சிவராஜ் மீனா, பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுடன் ஆலோசனை நடத்தி, காலை 5 மணி முதல் 8 மணி வரையிலான இந்த நேரத்தை ஏனாம் மக்களுக்கு பிரத்யேகமாக ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து வாங்குபவர்கள் வருவதற்கு முன்பாகவே, உள்ளூர் மக்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், ஏனாம் நிர்வாகம் அதிகாலை நேரங்களை அவர்களுக்காக இன்று முதல் ஒதுக்கியுள்ளது.

## இரு தொகுதிகளில் போட்டி: தேர்தல் செலவை வேட்பாளர் ஏற்க உத்தரவிடக் கோரிய வழக்கு தள்ளுபடி



சென்னை, ஏப்.29-

தேர்தல்களில் இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்யும் போது, தேர்தல் செலவை திருப்பி செலுத்துவதாக உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.மதுரை மேலூரை சேர்ந்த மணி என்பவர் தாக்கல் செய்த மனுவில், சட்டமன்றம், மக்களவை தேர்தல்களில் சில வேட்பாளர்கள் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இரு தொகுதிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. அதனால் அரசுக்கு செலவு ஏற்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். அதனால், இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ராஜினாமா செய்யும் தொகுதியின் தேர்தல் செலவுகளை ஏற்க வேண்டும் என உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.இந்த மனு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, வேட்பாளர்கள் இரு தொகுதிகளில் போட்டியிட சட்டம் அனுமதியளிக்கிறது. இந்த சட்டப்பிரிவை எதிர்த்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதைச் சுட்டிக்காட்டி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது

## மேற்கு வங்க தேர்தல் களத்தில் மக்களிடம் நீதி கேட்கும் மகள்களை இழந்த 2 பெண்கள்





கொல்கத்தா, ஏப்.29-

மேற்கு வங்கத்தில் முதல் கட்ட சட்டப்பேரவைத் தேர்தல் நிறைவடைந்து, நாளை 2ம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதில் இரு பெண் வேட்பாளர்களின் ஆவேச பிரச்சாரம் மக்களிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.பெண் மருத்துவர் கொலை: கடந்த 2024 ல் ஆக.9ம் தேதி மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவமனையில் இரவு பணியில் இருந்த 31 வயதான பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டார்.

அந்த பெண் மருத்துவர் தற்கொலை செய்து கொண்டதாக மருத்துவமனை நிர்வாகம் பெற்றோரிடம் கூறியது. மேலும் கொலையை மறைக்க மருத்துவமனை நிர்வாகம் பல்வேறு வழிகளைக் கையாண்டது. ஆனால் மேற்குவங்கம் முழுவதும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள், மருத்துவர்கள் கொதித்தெழுந்து தொடர் போராட்டங்களை நடத்தினர். இதன்காரணமாக பெண் மருத்துவர் மரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டது. இதில் அவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் கொலை வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது. ஆனால் கொலை நடந்த இடத்தில் முக்கிய ஆதாரங்கள் அழிக்கப்பட்டு இருந்ததால் சிபிஐ அதிகாரிகளால் முழு உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வர முடியவில்லை. இந்த வழக்கில் மேற்குவங்க காவல் துறையில் தன்னார்வலராக பணியாற்றிய சஞ்சய் ராய்க்கு மட்டும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. ஆளும் திரிணமூல் காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவுடன் பலர் வழக்கில் இருந்து தப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

பெண் மருத்துவரின் கொலைக்கு நீதி கேட்டு அவரது தாய் ரத்னா தேவ்நாத் பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தினார். அவருக்கு பாஜக ஆதரவுக் கரம் நீட்டியது. தற்போது பனிஹாட்டி சட்டப்பேரவைத் தொகுதியில் பாஜக வேட்பாளராக அவர் முன்னிறுத்தப்பட்டு உள்ளார். சில நாட்களுக்கு முன்பு ரத்னா தேவ்நாத்துக்கு ஆதரவாக பிரதமர் மோடி பிரச்சாரம் செய்தார். அப்போது பிரதமர் கூறும்போது, “பாலியல் வன்கொடுமை குற்றவாளிகள் அனைவரும் மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு நீதியின் முன்பு நிறுத்தப்படுவார்கள்" என்று உறுதி அளித்தார்.குண்டு வெடிப்பில் சிறுமி.. கடந்த ஆண்டு கலிகஞ்ச் சட்டப்பேரவைத் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் திரிணமூல் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அப்போது ஆளும் கட்சியினர் வெற்றிவிழா ஊர்வலத்தை நடத்தினர். சிலர் நாட்டு வெடிகுண்டுகளை வீசினர். இதில் ஒரு குண்டு குடியிருப்பு பகுதிக்குள் விழுந்து வெடித்துச் சிதறியது. இதில் தமன்னா சாதுன் (9) என்ற சிறுமி உயிரிழந்தார். இந்த சிறுமியின் தாய் சபினா யாஸ்மின், கலிகஞ்ச் தொகுதியில் மார்க்சிஸ்ட் வேட்பாளராக களமிறக்கப்பட்டு உள்ளார்.பிரச்சாரத்தின்போது அவர் கூறும்போது, “வன்முறையை எதிர்த்தும், குழந்தைகளின் பாது காப்பை முன்னிறுத்தியும் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனது மகளை போன்று வேறு எந்த குழந்தையும் கொடூரமாக உயிரிழக்கக்கூடாது. எனது மகளின் உயிரிழப்புக்காக மக்கள் மன்றத்தில் நீதி கேட்டு நிற்கிறேன்" என்று தெரிவித்தார்.

## தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தை தாண்டியது



சென்னை, ஏப்.29-

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் வரும் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தை தாண்டியுள்ளதாக பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரி வித்தனர்.தமிழகத்தில் 37,554 அரசு பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 52 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். தற்போது மாணவர்களின் நலன் கருதி கற்றல், கற்பித்தல் சார்ந்து எண்ணும் எழுத்தும், காலை உணவு, திறன்மிகு வகுப்பறைகள் உள்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில் கடந்த 2024ம் ஆண்டு முதல் மாணவர் சேர்க்கை முன்கூட்டியே அதாவது மார்ச் மாதமே தொடங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, வரும் கல்வி ஆண்டுக்கான (20262027) மாணவர் சேர்க்கையை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் கடந்த மார்ச் 1ம் தேதி சென்னையில் தொடங்கி வைத்தார். இதைத்தொடர்ந்து, மாநிலம் முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை நடைபெற்று வந்தது. இந்நிலையில் சேர்க்கை பெற்ற மாணவர்கள் விவரம் தற்போது வெளியாகியுள்ளது.

இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் கூறும்போது, ‘‘அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் வரும் கல்வியாண்டுக்கு நேற்றைய நிலவரப்படி, ஒன்றாம் வகுப்பில் 97,737 பேர், 2 முதல் 8 வரையிலான வகுப்புகளில் 8,178 பேர், மழலையர் வகுப்புகளில் 6,796 பேர் என மொத்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 711 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். அரசுப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதால் கிடைக்கும் நலத்திட்டங்கள் குறித்து தமிழகம் முழுவதும் நகரம், கிராமப்புறங்களில் பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்’’ என்றனர்.

## புதுச்சேரியில் வாங்கிய மதுவை தமிழகத்துக்குள் அனுமதிப்பதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அரசு முறையீடு



சென்னை, ஏப்.29-

தனிநபர் 4.5 லிட்டர் அளவுக்கு மதுபானம் வைத்துக் கொள்ளலாம் என்ற அரசாணையைச் சுட்டிக்காட்டி, புதுச்சேரியில் இருந்து மதுபானம் கொண்டு வந்தவருக்கு எதிரான வழக்கை ரத்து செய்த உத்தரவில் விளக்கம் கோரி தமிழக அரசு தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் இருந்து மதுபானம் கொண்டு வந்ததாக தொடரப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி கடலூரைச் சேர்ந்த வல்லரசு என்பவர் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தனிநபர் ஒருவர் 4.5 லிட்டர் மதுபானம் வைத்திருக்கலாம் என்ற அரசாணையைச் சுட்டிக்காட்டி, வழக்கை ரத்து செய்தது. இதையடுத்து, புதுச்சேரியில் இருந்து 4.5 லிட்டர் அளவுக்கு மதுபானம் கொண்டு வர உயர் நீதிமன்றம் அனுமதித்துள்ளதாக, சமூக வலைதளங்களில் செய்தி பரவியது.இந்த நிலையில், இந்த உத்தரவு குறித்து விளக்கம் அளிக்க கோரிய மனுவை நாளை விசாரணைக்கு எடுக்கக் கோரி, தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, நீதிபதி எம்.நிர்மல்குமார் முன் முறையீடு செய்தார்.

அப்போது அவர், நீதிமன்ற உத்தரவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாகவும், தனிநபர் 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ள அனுமதியளிக்கும் அரசாணை புதுச்சேரி மாநில மதுபானத்துக்கு பொருந்தாது எனவும், பிற மாநில மதுபானங்கள், மிகக் குறைந்த அளவில் இருந்தாலும் அதனை வைத்திருப்பது அல்லது விற்பனை செய்வது சட்டப்படி குற்றம் என அரசு தரப்பில் ஏற்கெனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.தலைமை குற்றவியல் வழக்கறிஞரின் முறையீட்டை ஏற்ற நீதிபதி, விளக்கம் கோரிய மனுவை நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அனுமதியளித்துள்ளார்.




## காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் காலையில் வேலை நிறுத்தம் மாலையில் திரும்ப பெற்றனர்

நாமக்கல், ஏப்.29-

வாடகை நிலுவை தொகையை வழங்கக் கோரி, தென்மண்டல காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று காலை வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், மாலையில் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.நாமக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தென் மண்டல எல்.பி.ஜி.காஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது.இச்சங்கத்தில் 4,500 காஸ் டேங்கர் லாரிகள் உள்ளன. இந்த லாரிகள் அனைத்தும் மத்திய அரசுக்குச் சொந்தமான ஐஓசி, பிபிசிஎல், எச்பிசிஎல் ஆகிய 3 எண்ணெய் நிறுவனங்களுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து சமையல் எரிவாயுவை ஏற்றிக் கொண்டு பாட்டிலிங் மையங்களுக்கு எடுத்துச் செல்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்படுகின்றன.

இதில், 1,000 எல்பிஜி காஸ் டேங்கர் லாரிகள் ஐஓசி நிறுவனத்துக்காக (இந்தியன் ஆயில் நிறுவனம்) இயக்கப்பட்டு வருகின்றன.இந்த நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு ரூ.50 கோடிக்கு மேல் வாடகை வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இந்த வாடகை நிலுவையை வழங்கக் கோரி நேற்று காலை முதல் ஐஓசி நிறுவனத்துக்கு இயக்கப்படும் காஸ் டேங்கர் லாரிகளில் லோடு ஏற்றாமல் ஆங்காங்கே நிறுத்தி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.இதனிடையே, ஐஓசி அதிகாரிகள், டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, 2 நாட்களில் வாடகை நிலுவைத் தொகை வழங்குவதாக உறுதியளித்தனர். இதை ஏற்று, டேங்கர் லாரி உரிமையாளர்கள் நேற்று மாலை வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்தனர்.

## ஏப்ரல் மாதத்தில் பெய்த வரலாறு காணாத கனமழை வெள்ளத்தில் மூழ்கிய தென் சீனாவின் முக்கிய நகரங்கள்

கின்சோ, ஏப்.29-

தெற்கு சீனாவில் பெய்த கனமழை மற்றும் புயலால் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தெற்கு சீனாவின் குவாங்சி பிராந்தியத்தில் அமைந்துள்ள கின்சோ (Qinzhou) நகரில் கனமழை கொட்டி தீர்த்தது. அங்கு தெருக்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன, சாலைகள் வெள்ளக்காடாக மாறியதால் வாகனங்கள் நீரில் தத்தளித்தன.இந்த நகரில் இயல்பு வாழ்க்கை மற்றும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக அவசர மீட்புக் குழுக்கள் துரிதமாக செயல்பட்டன. வெள்ளநீர் சூழ வீடுகளுக்குள் சிக்கியிருந்த நபர்களை மீட்க, மீட்பு குழுவினர் காற்றடைக்கப்பட்ட படகுகளை பயன்படுத்தினர். இது தொடர்பாக வெளியாகி இருக்கும் காணொளி காட்சிகளில் வெள்ளத்தில் சிக்கி இருக்கும் நபர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் மீட்புப் பணியாளர்கள் மார்பளவு நீரில் நடந்து செல்வதும், கடும் வெள்ளப்பெருக்கிற்கு மத்தியில் தீயணைப்பு வீரர்கள் முதியவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குத் தூக்கிச் செல்வதும் பதிவாகி உள்ளது. கின்சோவில் பெய்த கனமழையால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து, 200க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக அரசு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.இதனிடையே ஆண்டின் இந்த நேரத்தில் இத்தகைய தீவிர மழைப்பொழிவு அசாதாரணமான ஒன்று என வானிலை ஆய்வாளர்கள் கூறி இருக்கிறார்கள்.வெறும் 8 முதல் 10 மணி நேரத்தில் சுமார் 273 மி.மீ மழை பதிவான நிலையில், கனமழை காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்ததாக நிபுணர்கள் கூறி இருக்கிறார்கள்.தெற்குக் கடலோரப் பகுதிகளில் இந்த அளவிலான கனமழை பொதுவாக மே மாதத்தின் நடுப்பகுதி முதல் பிற்பகுதி வரையிலான கோடை பருவமழைக்குப் பிறகே பெய்யும் என்றும், இதனால் ஏப்ரல் மாத இறுதியில் ஏற்பட்ட இந்த பெருமழை மிகவும் அரிதானது என்றும் அந்நாட்டின் வானிலை ஆய்வாளர்கள் கூறி இருக்கிறார்கள். கின்சோ நகரில் பெய்த கனமழை காரணமாக, சின்ஹுவா சாலை மற்றும் மிங்யாங் தெரு சந்திப்புக்கு அருகே நகர்ப்புறங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஆனால் உயிரிழப்புகள் ஏதும் பதிவாகவில்லை இந்த திடீர் வெள்ளப்பெருக்கால், அப்பகுதியைச் சேர்ந்த பல குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே சிக்கி கொண்டதுடன், அவர்களுக்குப் பாதுகாப்பு ரீதியாகவும் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.இதனிடையே சீன வானிலை ஆய்வுத் துறையின் தகவல்படி, Qin-nan மாகாணத்தில் உள்ள ஜியுலாங் (Jiulong) நகரில் அதிகபட்சமாக 362.2 மி.மீ மழை பதிவானது. இதில் வெறும் ஒரு மணி நேரத்திற்குள் மட்டும் 143.3 மி.மீ மழை கொட்டி தீர்த்தது. சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஏராளமான வீடியோக்கள் அந்நகரின் சாலைகள் ஆறுகளாக மாறியிருப்பதையும், வாகன நிறுத்துமிடங்களில் கார்கள் நீரில் மூழ்கியிருப்பதையும், நகர்ப்புறங்களில் மீட்புக் குழுவினர் படகுகள் மூலம் மக்களை வெளியேற்றுவதையும் காட்டியுள்ளன

## தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவையில் இருந்து சென்னைக்கு விமான கட்டணம் பல மடங்கு உயர்வு



சென்னை, ஏப்.29-

தமிழக சட்டப்பேரவை தேர்தல் கடந்த 23ம் தேதி நடைபெற்றது. சென்னை, புறநகர் பகுதிகளில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊர்களுக்குச் சென்றனர். வாக்களித்த பின்னர் நேற்று முன்தினம் மாலை முதல் சென்னைக்கு வரத் தொடங்கினர். பேருந்து, ரயில்களில் டிக்கெட் கிடைக்காதவர்கள் விமானங்களில் சென்னை செல்வதற்கு திட்டமிட்டனர்.

நேற்று முன்தினம் இரவில் தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை ஆகிய விமானங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.ஓரிரு விமானங்களில் மட்டுமே, சில டிக்கெட்டுகள் இருந்தன. அந்த டிக்கெட் கட்டணம் பலமடங்கு அதிகரித்திருந்தது. தூத்துக்குடி சென்னைக்கு வழக்கமாக ரூ.5,354 இருந்த கட்டணம் நேற்று முன்தினம் இரவுமுதல் நேற்று காலை வரை ரூ.17,089 வரையும், மதுரை சென்னைக்கு ரூ.5099 ஆக இருந்த கட்டணம் ரூ.32,508 வரையும், திருச்சி சென்னைக்கு ரூ.4,551 ஆக இருந்த கட்டணம் ரூ.14,310 வரையும், கோவை சென்னைக்கு ரூ.4,634 ஆக இருந்த கட்டணம் ரூ.11,149 வரையும் உயர்ந்திருந்தன.

விமான டிக்கெட் கட்டண உயர்வு, தேர்தலுக்கு வாக்களிக்க சொந்த ஊர்களுக்குச் சென்ற மக்களை அதிர்ச்சி அடையச் செய்தது.

## மேற்கு வங்க தேர்தல் பிரச்சாரத்தில் முக்கிய இடம்பிடித்த மீன் அரசியல்



புதுடெல்லி, ஏப்.29-

இந்தியாவில் மீன் நுகர்வு மிக அதிகமாக உள்ள மாநிலங்களில் மேற்கு வங்கமும் ஒன்று. இங்கு அதிக நதிகள் கொண்ட பூகோள அமைப்பு காரணமாக பெரும்பாலான மக்கள் மீன் உணவை அதிகம் உண்கின்றனர். அசைவ உணவுப் பட்டியலில் மீன் இருந்தாலும் பிராமணர் உள்ளிட்ட சைவ உணவாளர்களும் அதை சாப்பிடுகின்றனர்.இந்நிலையில், பாஜக ஆட்சிக்கு வந்தால் மீன் உள்ளிட்ட பெங்காலி வகை உணவு முறையை தடை செய்து விடுவார்கள் என முதல்வர் மம்தா பானர்ஜி முதல்கட்ட தேர்தல் பிரச்சாரத்தில் புகார் எழுப்பினார். இதை மறுக்க வேண்டிய கட்டாயம் பாஜகவுக்கு ஏற்பட்டது. இதனால் நேற்றுடன் முடிந்த இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரத்திலும் மீன் அரசியல் முக்கிய இடம் பிடித்தது.சில நாட்களுக்கு முன், பாஜக எம்.பி. அனுராக் தாக்கூர் மீன் சாப்பிடும் காட்சிப்பதிவு வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. பாஜக தலைவர்களில் பலர் தங்கள் கைகளில் மீன்களை ஏந்தியபடியே பிரச்சாரம் செய்தனர். போஜ்புரி மொழி திரைப்பட நாயகரும் உ.பி.யின் கோரக்பூர் எம்.பி.யுமான ரவி கிஷன் தனது பிரச்சாரக் காட்சிப்பதிவில், “தேர்தல் முடிவு வெளியாகும் மே 4ம் தேதிக்குப் பிறகு, நீங்கள் வழக்கத்தை விட நான்கு மடங்கு மீன் சாப்பிடுங்கள்.

அனைத்து வகை மீன்களையும் நாங்கள் இங்கு கொண்டு வந்து சேர்ப்போம். என்டிஏ ஆட்சி செய்யும் மாநிலங்களில் இருந்து மீன்களைக் கொண்டுவந்து மேற்கு வங்கக் கிணறுகள் மற்றும் குளங்களில் விடுவோம். எனவே அதிக மீன் சாப்பிடுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது" என்றார். இந்த சூழலில் கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் மேற்கு வங்க மக்களின் மீன் நுகர்வு குறைந்துள்ளதாக புள்ளிவிவரம் வெளியாகியுள்ளது.மத்திய அரசின் தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் தரவுகளின்படி, நாடு முழுவதும் 45.7% ஆண்களும், 35.7% பெண்களும் மீன் உண்கின்றனர். தேசிய அளவில் ஆண்களே அதிக அளவில் மீன் உண்பவர்களாக இருந்தாலும், மேற்கு வங்க நிலைமை இதற்கு மாறாக உள்ளது. இங்கு 87.8% பெண்களும், 87.4% ஆண்களும் மீன் உண்கின்றனர். இது தொடர்பான கணக்கெடுப்பு 2019, 2021க்கு இடைப்பட்ட காலத்தில் நடத்தப்பட்டது.ஆனால் 201516ம் ஆண்டு கணக்கெடுப்பு அடிப்படையில் மேற்கு வங்கத்தில் 91.4% பெண்களும், 91.3% ஆண்களும் மீன் உட்கொண்டு வந்தனர். எனவே 2015 16ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2019 21ல் மீன் உண்ணும் ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை சுமார் 4% குறைந்துள்ளது.இறைச்சி, மீன், முட்டைகளுக்காக செலவிடும் குடும்பங்களின் பட்டியலில், மேற்கு வங்கம் 2வது இடத்தில் உள்ளது. கேரளா முதலிடத்தில் உள்ளது.

# திருப்பூரின் தாகம் தீர்த்த ‘தாய் மடி’ வறண்டது!..

## நஞ்சராயன் குளத்தில் பறவைகள் இல்லை! அலட்சியத்தால் அழியும் பல்லுயிர் சூழல்! நல்லாற்றை மீட்டெடுப்பதே ஒரே தீர்வு!




திருப்பூர் ஏப். 29-

திருப்பூரின் "தாய் மடி" என்று போற்றப்படும் நஞ்சராயன் குளம், இன்று தனது ஜீவநாடியை இழந்து மரணப் படுக்கையில் உள்ளது. சுமார் 440 ஏக்கர் பரப்பளவில் விரிந்து கிடக்கும் இந்தக் குளத்தின் உயிர்நாடியே 'நல்லாறு' தான். ஆனால், இன்று அந்த நல்லாறு குளத்திற்கு நன்மையைத் தருவதற்குப் பதிலாக, விஷத்தையே சுமந்து வருகிறது.*நல்லாறு இல்லையேல் நஞ்சராயன் இல்லை!*நஞ்சராயன் குளத்திற்கான 80 சதவீத நீர்வரத்து நல்லாற்றின் மூலமே கிடைக்கிறது. "நல்லாறு வழித்தடம் சீரமைக்கப்படாமல், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல், வெறும் பெயருக்குச் சரணாலயம் என்று அறிவிப்பது எதற்க்கு?" என்று நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் கேள்வி எழுப்புகின்றனர். நீர்வரத்து நின்று போனதாலும், வரும் நீரும் சுத்திகரிக்கப்படாத சாயக்கழிவு நீராக இருப்பதாலும், குளத்தின் தரைப்பகுதி வறண்டு வெடிப்பு விட்டுள்ளது.

*பறவைகள் வராத சரணாலயம் எதற்கு?*130க்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வலசை வந்து முகாமிட்ட இடம் இது. இதன் சிறப்பைக் கருதித்தான் தமிழக அரசு இதனைப் பறவைகள் சரணாலயமாக அறிவித்தது. ஆனால், இன்று குடிக்கத் தண்ணீரின்றிப் பறவைகள் இந்தக் குளத்தைத் தவிர்த்து வருகின்றன.

"பறவைகள் வராத ஒரு இடத்தை எதற்குச் சரணாலயம் என்று அழைக்க வேண்டும்? அந்த அறிவிப்பை அரசே திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது, அந்தப் பெயரைக் காப்பாற்ற வேண்டுமென்றால், உடனடியாக நல்லாற்றைத் தூர்வாரி, கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, குளத்திற்குச் சுத்தமான நீர்வரத்தை உறுதி செய்ய வேண்டும்" எனச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆவேசமாகத் தெரிவிக்கின்றனர்.

வீட்டுல ஆளே இல்லாதப்போ வாசல்ல 'வரவேற்பு'ன்னு போர்டு தொங்குற கதைதான் இது. நல்லாற்றை மீட்டெடுத்தாத்தான், பறவைகள் சரணாலயம் என்ற அந்த போர்டுக்கும் மரியாதை, இந்த ஊருக்கும் பாதுகாப்பு என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் குமுறலாக உள்ளது.





## ஆணை குட்டப்பட்டி கிராமத்தில்”தீ பாய்ந்த அம்மன், பெரியாண்டவர் திருக்கோயில்” சித்திரை திருவிழா

சேலம், ஏப்.29-

சேலம் தெற்கு வட்டம் ஆணை குட்டப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள "தீ பாய்ந்த அம்மன், பெரியாண்டவர் திருக்கோயில்" சித்திரை திருவிழா.ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை மாதம் 15 ஆம் நாள், சேலம் தெற்கு வட்டம் ஆணைகுட்டப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள தீப்பாய்ந்த அம்மன் பெரியாண்டவர் குலதெய்வ பூஜை, பெத்தகுனியார் குடும்ப பங்காளி வகையறாக்கள் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை குல தெய்வபூஜை மூன்று தலைக்கட்டுகளாக நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ பராபவ வருடம் சித்திரை மாதம் 15 ஆம் நாள் செவ்வாய்க்கிழமையன்று, தீப்பாய்ந்த அம்மனுக்கு பூஜை கூடை எடுத்து பெரியாண்டவர் சன்னதிக்கு வந்து, பொங்கல் வைத்தும், பெரியாண்டவருக்கு முப்பூஜை செய்தும் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. 200 வருடங்களுக்கு மேலாக மிக பழமை வாய்ந்த, பெத்தகுனியார் குடும்ப பங்காளிகள் வகையறா "தீப்பாய்ந்த அம்மன் பெரியாண்டவர்" திருக்கோயில் குலதெய்வ பூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில், 1000க்கும் மேற்பட்ட பெத்தகுனியார் குடும்ப பங்காளி வகையறாக்கள் கலந்து கொண்டனர்

## தென்காசி மாவட்டத்தில் மெகா கணக்கெடுப்பு: பனை மற்றும் தென்னை விவசாயிகளுக்கு அடையாள அட்டை



தென்காசி ஏப். 29-

"உழைக்கும் கைகளுக்கு அங்கீகாரம்... விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்குப் பாதுகாப்பு!" தென்காசி மாவட்ட பனை மற்றும் தென்னை விவசாயிகளின் எதிர்காலத்தை உறுதி செய்யத் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு அதிரடியான களப்பணியைத் தொடங்கியுள்ளது. அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் பொருளாளர் சுப்பிரமணியன் தலைமையில், மாவட்டத் தலைவர் குருசாமி நாடார் முன்னிலையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் பங்கேற்றுப் பேசினார். அப்போது, பனை மற்றும் தென்னை மரம் ஏறும் தொழிலாளர்கள், அதைச் சார்ந்த தொழில் செய்பவர்கள் ஆகியோருக்கான அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்களை வழங்கினார்.*மாவட்ட ஆட்சியருக்குப் புள்ளிவிவரம்:*"தென்காசி மாவட்டத்தில் யார், எங்கே, எவ்வளவு பேர் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள் என்ற துல்லியமான கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இந்தத் தகவல்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, விவசாயிகளின் பாதுகாப்பு மற்றும் கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுக்கப்படும்" என லூர்து நாடார் உறுதியளித்தார்.சில சங்கங்கள் விவசாயிகளைச் சட்டத்தை மீறத் தூண்டுவது குறித்துப் பேசிய அவர், "சட்டத்தை மதிக்கக் கற்றுக் கொடுங்கள், மீறச் சொல்லாதீர்கள்! கள்ளுக்கான தடையை நீக்கப் போராட வாருங்கள், ஆனால் விவசாயிகளைத் தவறான வழியில் வழிநடத்தாதீர்கள்" என அனல் பறக்கப் பேசினார்.

இந்த மாபெரும் ஆலோசனைக் கூட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் கடையநல்லூர் முருகன் நன்றி கூறினார்.

## அம்மன் அருளும்... அன்னதானமும்! சேலம் புதுப்பட்டி மாரியம்மன் கோவில் திருவிழாவில் திரண்ட பக்தர்கள்



சேலம் ஏப். 29-

"அம்மன் அருளும்... ஆடல் பாடலும்!" சேலம் செவ்வாய்பேட்டை சித்தர் கோவில் ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு அன்னை புதுப்பட்டி ஸ்ரீ மாரியம்மன், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ முத்து கருப்பண்ணசுவாமி திருக்கோவிலின் 6ஆம் ஆண்டு சித்திரை பெருந்திருவிழா விமரிசையாக நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை காலை, செவ்வாய்பேட்டை ஸ்ரீ காளியம்மன் கோவிலில் இருந்து தொடங்கிய பால்குட ஊர்வலம் பக்திப் பரவசத்துடன் புதுப்பட்டி அம்மன் கோவிலைச் சென்றடைந்தது. நூற்றுக்கணக்கான பெண்கள் சீருடையணிந்து பால்குடம் ஏந்தி வர, அம்மனுக்குச் சிறப்புப் பால் அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சக்தி அழைத்தல், மகா தீபாராதனை மற்றும் ஊர் மக்கள் பங்கேற்ற பிரம்மாண்ட அன்னதானம் நடைபெற்றது.

புதன்கிழமை நடைபெற்ற சத்தாபரண நிகழ்ச்சி விழாவின் சிகரமாக அமைந்தது. கண்கவர் வாணவேடிக்கைகள் விண்ணைப் பிளக்க, மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் எனத் கிராமியக் கலைகள் கண்முன்னே விரிந்தன. இளைஞர்களை உற்சாகப்படுத்த 'டிஜே' இசை நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



■ சேலம் மாவட்டம், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், திருச்செங்கோடு சாலையில் உள்ள விவேகானந்தா கல்வி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்பு அறையை மாவட்டத் தேர்தல் அலுவலரும், சேலம் மாவட்ட ஆட்சித்தலைவருமான மருத்துவர் அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு தேனி மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 04/05/ 2026 அன்று நடைபெறுவதை ஒட்டி மேற்கொள்ளப்பட்ட வேண்டிய பணிகள் குறித்து ஆய்வு கூட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் தலைமையில் நடைபெற்றது.



■ ஈரோடு மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி முன்னிலையில், வாக்கு எண்ணும் மையங்களில் பணிபுரியும் தேர்தல் நுண்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான பணி ஒதுக்கீடு, இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளம் மூலம் 'கணிணி குலுக்கல்' முறையில் தேர்வு செய்யப்பட்டது.இந்த நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தேர்தல் நடத்தும் அலுவலர்களான அர்பித் ஜெயின்(ஈரோடு கிழக்கு), சிவானந்தம் (கோபிசெட்டிபாளையம்), சிந்துஜா (ஈரோடு மேற்கு) மற்றும் கணிணி நிரலாளர் வெங்கடேஷ் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.



■ இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் ஆகியோர் மதுரை மாவட்டத்தில் சித்திரை திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு, அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

### நாக்பூரில் ஒலித்த மதுரைப் பெயர் அர்ச்சுனன்

## அறிவியல் புலனாய்வில் தேசிய அளவில் முதலிடம் பிடித்த தமிழகக் காவல்துறை



மதுரை ஏப். 29-

"குற்றவாளிகள் எவ்வளவு பெரிய புத்திசாலியாக இருந்தாலும், அறிவியலின் பிடியிலிருந்து தப்ப முடியாது!" என்பதைத் தேசிய அளவில் நிரூபித்துக் காட்டியுள்ளார் மதுரையைச் சேர்ந்த ஒரு வீரத் திருமகன்.

*தேசிய அளவிலான சாதனை:*

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் நடைபெற்ற 69 வது அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டியில், ஒட்டுமொத்த இந்தியாவே வியக்கும் வகையில் தமிழகக் காவல்துறை சாதனை படைத்துள்ளது. இதில் 'குற்றப் புலனாய்வில் அறிவியல் உதவிகள்' (Scientific Aids to Investigation) பிரிவில் பங்கேற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் காவல் நிலையச் சார்பு ஆய்வாளர் (SI) அர்ச்சுனன் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.*மதுரை எஸ்பி பாராட்டு:*

தங்கப்பதக்கத்துடன் கம்பீரமாகத் திரும்பிய சார்பு ஆய்வாளர் அர்ச்சுனனை, மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அர்விந்த் நேரில் அழைத்து வெகுவாகப் பாராட்டியதுடன், கௌரவப்படுத்தினார். மதுரையின் சமயநல்லூர் உட்கோட்டத்திற்கு உட்பட்ட அலங்காநல்லூர் காவல் நிலையத்திற்கு இந்தப் பதக்கம் ஒரு மணிமகுடமாக அமைந்துள்ளது.

* துப்பறிவதில் கில்லாடி:* குற்றச் சம்பவங்கள் நடந்த இடங்களில் மிக நுணுக்கமான அறிவியல் ஆதாரங்களைச் சேகரித்து, குற்றவாளிகளை அடையாளம் காண்பதில் அர்ச்சுனன் காட்டிய திறமை, அகில இந்திய அளவில் நடுவர்களைப் பிரம்மிக்க வைத்துள்ளது.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000